# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 258/2024

Prosecution PW 2

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | அப்துல் ரகுமான் |
| Father's Name | : | முகமது அலி |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 24.03.2026.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில்லை. 317 குவிமுசவின் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் பள்ளப்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். என்ன சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி குவிமுச பிரிவு 161க்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)**

போலீஸ் விசாரணையில் கடந்த 16.03.2019ம் தேதி மதியம் 01.30 மணியளவில் கரூர் பேருந்து நிலையம், கிழபுறமுள்ள மணீஸ் பாருக்கு நானும், இர்ஷாத் இருவரும் சென்று சாப்பிட்டுவிட்டு பில் கொடுக்கும்போது, அங்கு வந்த எதிரிகள் என்னை பீர் பாட்டிலால் அடித்து, தகாத வார்த்தைகளால் திட்டி, கொலை மிரட்டல் விடுத்தார்கள் என போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./—எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 258/2024

Prosecution PW 3

Deposition of Witness for Defence

Court

Name : இர்ஷாத்

Father's Name : கமால்

Village :

Taluk :

District :

Age :

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 24.03.2026.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில்லை. 317 குவிமுசவின் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் பள்ளப்பட்டியில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். என்ன சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி குவிமுச பிரிவு 161க்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)**

போலீஸ் விசாரணையில் கடந்த 16.03.2019ம் தேதி மதியம் 01.30 மணியளவில் கரூர் பேருந்து நிலையம், கிழபுறமுள்ள மணீஸ் பாருக்கு நானும், அப்துல் ரகுமான் இருவரும் சென்று சாப்பிட்டுவிட்டு பில் கொடுக்கும்போது, அங்கு வந்த எதிரிகள் என்னை பீர் பாட்டிலால் அடித்து, தகாத வார்த்தைகளால் திட்டி, கொலை மிரட்டல் விடுத்தார்கள் என போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 258/2024

Prosecution PW 4

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | பத்மசீலன் |
| Father's Name | : | பழனியாண்டி |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 24.03.2026.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில்லை. 317 குவிமுசவின் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கரூர் நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.03.2019 ம் தேதி காலை 15.00 மணிக்கு உதவி ஆய்வாளர் கஸ்தூரி நிலைய பொறுப்பில் இருந்தபோது கரூர்

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலின்படி அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சபியுல்லாகான் என்பவரிடம் பெற்று வந்த வாக்குமூலம் அடிப்படையில் நிலைய குற்ற எண்.206/2019, ச.பி. 294(பி), 324, 506(2) இ.த.ச வின்படி வழக்கு பதிவு செய்துள்ளார். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. அன்றைய தினம் மாலை 16.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி சாட்சிகள் முன்னிலையில் உருட்டு கட்டை, ரீப்பர் கட்டை, காலி பீர் பாட்டில் ஒன்று ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியுள்ளார். **கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் தொடர்ந்து 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 16.03.2019 ம் தேதி 17.47 மணிக்கு இவ்வழக்கின் எதிரிகளை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

3. இவ்வழக்கில் காயம்பட்ட சபியுல்லாகான், அப்துல் ரகுமான், இர்ஷாத் ஆகியோர்களுக்கு சிகிச்சையளித்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் வழங்கிய கரூர் மருத்துவ கல்லூரி அரசு மருத்துவமனை மருத்துவர் குமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **சபியுல்லாகானின் விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.6, 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அப்துல் ரகுமானின் விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.8,9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இர்ஷாத் விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.10,11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் சட்டப்பிரிவை** 294(பி), 324, 506(2) இ.த.ச விலிருந்து 294(பி), 323, 324, 506(2) இ.த.சவாக மாற்றம் செய்து அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **சட்டப் பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கின் கைப்பற்றிய சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். படிவம் 91 **அ.சா.ஆ. 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. உருட்டுக் கட்டை அ.சா.பொ.1, ரீப்பர் கட்டை அ.சா.பொ.2, காலி பீர் பாட்டில் அ.சா.பொ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** இத்துடன் உதவி ஆய்வாளர் புலன் விசாரணையை முடித்து குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

அ.சா.1 எந்தப்புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் புகார் தயார் செய்யப்பட்டு கையெழுத்து செய்யப்பட்டது

என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளிடமிருந்து எவ்வித சான்று பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன நாள், நேரம், இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த சாட்சி பட்டியலை வைத்துக்கொண்டு சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகள் யாரையும் விசாரிக்காமல் காவல் நிலையத்தில் வைத்து வாக்குமூலங்கள் தயார் செய்து கொண்டு எதிரியின் மீது தவறுதலாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**